# சுடர்

34
டிசம்பர் '83
மாத இதழ்
50 காசு

சென்னை மாநகராட்சி
வருமானத்தைப் பெருக்க
## ரூ. 1 கோடி செலவில்
## சினிமா தியேட்டர்கள்
மேல் சபையில் அமைச்சர் குழந்தைவேலு தகவல்

21-11-83





FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011



YOUR TRUSTED TRAVEL AGENT
For Fast and Friendly Service

**Ganesh Overseas Travel & Tours**



Your Reliable Tourist Car Operator
For Timeless Service

**Aruraj Cabs**

217. First Floor, Khaleel Shirazi Estate,
Pantheon Road, Egmore, Madras-600 008.

Cables : GANESHTOUR Tel : 810256

Your Safety Is Our Concern

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011



## அண்ணா அறக்கட்டளையின் அநியாயம்?

மதுரையிலுள்ள துணுக்கு எழுத்தாளர்கள் சங்கத் தலைவரான திசைமுத்து என்பவருக்கு இது வரையில் தாய் பத்திரிகையிலிருந்து பிரசுரமான துணுக்குகளுக்காக ரூ. 455/- வரை வர வேண்டியது இருககிறதாம். இதைப் பெற அவர் பல முறை முயற்சி செய்தும் பலனில்லையாம்.

பொதுவாக அந்தப் பத்திரிகை, துணுக்குகள் எழுதும் அன்பர்களுக்கு பணம் அனுப்புவதில்லை.

சிறு பத்திரிகைகள் கூட படைப்பாளர்களுக்கு பணம் அனுப்பும் இந்தக் காலத்தில் கொடுத்துச் சிவந்த கையாளரின் நிறுவனத்திலிருந்து வரும் இந்தப் பத்திரிகை இம்மாதிரி பித்தலாட்டம் செய்யலாமா?

—தா. பாக்யராஜ், 15, தெற்கு காவல் சட்டத்தெரு, மதுரை-1

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

# 3 இந்தியா
## நேற்று - இன்று - நாளை



**சுரண்டலின் வளர்ச்சியும், அழிவும் :—**

உழைப்பு சுதந்திரமானதாக இல்லாமல், பலவந்தமாக விலைக்கு வாங்கப்படும் போது அதாவது உழைப்பு இழிந்து போகும் போது இந்த மனிதத்தன்மையை விலைக்கு வாங்குகின்ற சமுதாய நடைமுறையே இந்தக் கேவலமான சுரண்டல என்பதாக உள்ளது.

இந்த சமுதாய அமைப்பின் சூத்திரதாரிகள் உழைப்பை சுதந்திரத்தை விலைக்கு வாங்குவதோடு நின்று விடுவதில்லை. விலைக்கு வாங்கப்பட்ட உழைப்பை அதன் மதிப்புக்குக் குறைத்தே வாங்குவதில் சுரண்டலைத் தீவிரப் படுத்திக் கொள்வதிலும் இவர்கள் பின் வாங்குவதில்லை.


சுதந்திரமற்ற உழைப்பின் உற்பத்தி தான் மூலதனத்தின் உற்பத்தியாக உருவெடுக்கிறது. எனவே சுதந்திரமற்ற உழைப்பு ஒரு புறமும் இதனைப் பலவந்தமாக விலைக்கு வாங்குகின்ற மூலதனம் ஒரு புறமுமாக இருக்கும் வரை இங்கே சுரண்டல் என்பதும் இருந்தே தீரும். இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள முரண்பாடின் அழிவிலேதான் மனித சுதந்திரம் மலர முடியும்.

இந்த முரண்பாட்டை அழிப்பதற்கு வக்கற்ற அரசியல் கட்சிகளை இனங்கண்டு கொள்வதில் தான் பாதிக்கப்படும் மக்களின் விடிவே அடங்கியுள்ளது.

**கடத்தலும் கள்ளத்தனமும் :—**

இந்தியாவில் பொருளாதார நெருக்கடி ஏற்படக் கூறப்படும் காரணங்கள் யாவுமே திருடனை விட்டு விட்டு அவனது காலடிச் சுவடுகளை அழிக்க முயல்வது போன்றே உள்ளது.

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011



கள்ளக்கடத்தல் காரர்கள் மீதான நடவடிக்கை தேவையான ஒன்று தான். ஆனால் அது மட்டுமே பிரச்சனைகளுக்கான நிரந்தர ஏற்பாடாகாது. கள்ளக்கடத்தல் மட்டுமல்ல கள்ளத் தனங்கள் யாவுமே அழிக்கப்பட வேண்டும். தேர்தல்களை வைத்து ஆட்சியைப் பிடித்து தங்களது வயிற்றையும் வாரிசையும் கட்டிக் காப்பதற்காக பண பலத்தவர்களது கட்சி சர்க்கஸ் காட்டுவது தொடர்ந்து நடக்கிறது.

கட்சியை நிலைப்படுத்தவும், அநியாங்களை மூடிமறைக்வும் உதவுவது பணம். அப்படியிருக்க கள்ளக் கடத்தலில் துணை நிற்பவர்களும் அதில் மறைமுகமாக பங்கு பெறுபவர்களும் அதைத் தடுப்பது என்பது எவ்வளவு பெரிய வேடம்! சிறுவயதில் துறைமுகத்தில் கூலிவேலை செய்பவராக ஆரம்பித்து மிகப் பெரிய கோடீஸ்வரராக வளர்ந்தது எப்படி என்ற கடத்தல் சக்கரவர்த்தி மஸ்தானின் விளக்கம் இந்தப் பொய்யான ஏமாற்று அரசியலை இனங்காண உதவும்.

பணம் நிறையச் சேர்த்தால் மட்டுமே இந்த அமைப்பில் வாழ்க்கை என்ற நிலை கிட்டும். சமுதாயமோ, அரசோ உழைக்கக் கூடியவனுக்கு வேலை கொடுத்து அவனது அடிப்படைத் தேவைகளைக் கூட அடைய வாய்ப்பை ஏற்படுத்த முடியாது. இந்த மரபைப் பின்பற்றுவதால் அரசியல் கட்சியில் செயல்படுவதிலிருந்து கடத்தல் வரை கள்ளத்தனங்களை செய்வதே கட்டாயத் தேவையாகிவிடுகிறது.

எனவே கள்ளக்கடத்தலைத் தடுக்க நடவடிக்கை என்று அதிகாரிகளை அதிகப்படுத்துவதாலோ, சட்டத்திட்டங்களின் வார்த்தைகளைக் கடுமையாக்கி சிலரை சிறையில் அடைப்பதாலோ தடுத்துவிட முடியாது. ஏமாளிகளாகவே மக்களை வைத்திருப்பது என்பது கட்சிகளின் சதித்திட்டம் மக்களை சரியான நல்ல மரபின் பக்கம் சிந்தித்து செயல்பட வைப்பதால் மட்டுமே கள்ளத்தனங்கள் எல்லாத் துறைகளிலிருந்தும் விரட்டப்படும். (தொடரும்)

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011



# தி.மு.க. மக்களுக்கு எதிரானதா?

சமீபத்தில் தமிழகத்தில் நிலவி வரும் கடுமையான அரிசி பற்றாக்குறைக்கு மத்திய அரசு பொது தொகுப்பில் இருந்து அரிசி கொடுத்து உதவ வேண்டும் என்று எம்.பிக்கள் பலர் கையெழுத்திட்டு மனு கொடுத்துள்ளார்கள். தமிழகத்தில் கிளையே கிடையாத தெலுங்குதேச எம்.பி. கூட கையெழுத்திட்டுள்ளார்

ஆனால் தமிழக மக்கள் தேர்ந்தெடுத்து அமோகமாக பாராளுமன்ற நாற்காலிகளை அடைத்திருக்கும் தி.மு.க. எம்.பி.க்கள் ஒருவர் கூட கையெழுத்திடவில்லை என்பது மிகவும் வருந்தக்கூடியது. இ. காங்கிரஸ் எம்.பி.யும், எம் ஜி.ஆர். எதிர்ப்பாளருமான அன்பரசு கூடகையெழுத்திட்டுள்ளார், தமிழக மக்கள் தலைவர்கள்-தமிழினத் தலைவரின் உடன் பிறப்புக்கள்...? கட்சி வேறுபாடுகளை பார்க்க வேறு சந்தர்ப்பம் இல்லையா. தனியாக வாதிட்டால் அரிசி கிடைத்து விடுமா?

ஏன் கையொப்ப மிடவில்லை என்றால் அ.தி.மு.க வினர் ஒரு முறை தான் கூப்பிட்டு கையெழுத்துப் போடச் சொன்னார்கள். சரியான முறையில் அழைக்க வில்லை என்று ஒரு தி.மு.க எம்.பி வருத்தப்பட்டுள்ளார். எம் ஜி.ஆரின் திட்டமிடல் தவறு தான். எனினும் மக்களின் நன்மை தானே முக்கியம்!

வீணான செயல்களுக்கு நெடிய போராட்டங்கள் செய்யும் தி.மு.க மக்களுக்காக உருப்படியாக செயல் பட்டுள்ளதா? நம் மக்களுக்கு நாம் தொண்டு செய்ய பிறர் அழைத்தால் தான் போக வேண்டுமா? தி.மு.க ஆளுங்கட்சி யான அ.தி.மு.கவுக்குத் தான் எதிர் கட்சி மக்களுக்கு அல்ல என்பதை உணர வேண்டும்,

—எஸ். ஏ. கருமாரன். தூத்துக்குடி-1

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

# சினிமா தியேட்டர்கள்

அடி மனதில் உறங்கிக் கிடக்கும் வக்கிர எண்ணங்களைத் தூண்டி, இயல்புக்கு மீறிய விஷயங்களைத் திணித்து மக்களை வசீகர கனவுகளில் ஆழ்த்தும் திரைப் படங்களைக் காட்ட தியேட்டர்கள் அவசியமாயிருக்கின்றன. நகரங்களை மட்டுமின்றி குக்கிராமங்களையும் கூட இந்த கலாச்சார சீரழிவுச் சாதனங்கள் ஆக்கிரமித்து வருகின்றன. வேறு எந்தத் துறையிலும் முதலீடு செய்வதையும் விட தியேட்டர்களில் முதலீடு செய்வது பண முதலைகளுக்கு நிரந்தர வருமானத்தைப் பெற்றுத் தருவதினால் தியேட்டர்களின் எண்ணிக்கை பெருகி வருகின்றன.

இந்த தியேட்டர்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. இங்குள்ள தியேட்டர்களின் எண்ணிக்கை 2036. தியேட்டர்கள் தினசரி 4 அல்லது 5 காட்சிகளைத் தொடர்ந்து நடத்துவதால் அசுத்தக் காற்று முழுமையாக வெளியேறுவதில்லை. ஓட்டை நாற்காலிகளைப் பழுது பார்க்காமல் அப்படியே காட்சி நடத்துவது; சரியான கழிவறை வசதிகள், தண்ணீர் வசதி இல்லாமல் சுகாதாரக் கேடான முறையில் வைத்திருப்பது; இருக்கைகள் இல்லா விட்டாலும் அதிக அளவு டிக்கட் கொடுத்து, நின்று கொண்டே படம் பார்க்க வைப்பது போன்ற அனைத்து ஏமாற்றுத் தனங்களும் தியேட்டர்களின் தினசரி வாடிக்கை.

இது தவிர தியேட்டர் நிர்வாகிகளின் அனுமதியோடு பிளாக்கில் டிக்கெட் விற்று கொள்ளையடிப்பது இன்று பெரும்பான்மையான தியேட்டர்களின் தினசரி வழக்கம். A/C என்று கூடுதல் கட்டணம் வசூலித்து படம் ஆரம்பித்தவுடன் A/C யை நிறுத்திவிட்டு படம் முடியும் தருவாயில் போடுவது வெகு நாட்களாக நடந்து வரும் மோசடி.

இத்தனை தொல்லைகளையும் சகித்துக் கொண்டு ஆபாச உணர்வுகளைத் தூண்டும் படங்களைப் பார்த்து விட்டு வரும் நம் மக்களுக்கு என்று விழிப்புணர்வு வரும்?

R. ராஜா

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

# பெண் விடுதலை

"சமூகத்தின் ஒரு பாதியான பெண்களை அடிமைப் படுத்தி வைத்திருக்கும் போது மறு பாதி எப்படி விடுதலை பெறும்" எனக் கேட்டார் நிவேதிதாதேவி. ஆனால் கவிஞர் கமலா தாஸ், "இந்தியாவில் பெண்களுக்கு எந்த விதமான கேடும் இல்லை. பெண் விடுதலை என்பது இங்கே தேவையில்லாத ஒன்றாகும்" என்று கூறி இருக்கிறார்.

பெண் விடுதலை பற்றி உங்கள் கருத்தென்ன? என்று நடுத்தர வர்க்கத்தினரைக் கேட்டோம். இரண்டு பெண்கள் கூறிய பதில் இது:

**வி. சுந்தரி:**

கணவன் கூறுவது நியாயமற்றதாக இருப்பினும் அவன் சொற்படியே மனைவி நடக்க வேண்டியதிருக்கிறது. மீறினால் வீட்டை விட்டு வெளியேற நேருகிறது. வீட்டை விட்டு வெளியேறும் பெண்களுக்கு சமுதாயத்தில் உரிய மரியாதை கிடைப்பதில்லை. ஒரு பெண் தனித்து வாழ்ந்தால் ஆண்களால் அவள் பழிக்கப் படுகிறாள். கேலி செய்யப்படுகிறாள். எனவே, அவமானத்துடன் தனித்து வாழ்வதை விட கணவனிடம் அடிமையாக வாழ்ந்து விடுவது என்று பல பெண்கள் முடிவு செய்து விடுகின்றனர். பெண் உரிமைச் சங்கங்கள் இன்னும் தீவிரமாக செயல் பட்டு பாதிக்கப்பட்ட பெண்களைக் காக்க முன் வந்தாலே ஒழிய இதற்கு விடிவு இல்லை. பெண் விடுதலை என்றாலே பல ஆண்கள் அச்சப்படுகிறார்கள். பெண் விடுதலை என்றால பெண்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தனி நாடு கேட்பது போல் நினைத்துக் கொள்கிறார்கள் போலும். பெண்களும் ஆண்களும் சமம் என்று கருதும் ஆண்களையே ஆண்மையுடையவர்கள் என்று நாம் கருத வேண்டும்.



FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

**உமாதேவி :**



மனிதாபிமானத்துடன் வேண்டும்...

இந்த தேசத்தை இந்திரா காந்தி ஆளவதினாலோ அல்லது அன்னை தெரஸாவுக்கு நோபல் பரிசு கிடைத்ததினாலோ பெண்கள் சம உரிமை அடைந்துவிட்டதாகச் சொல்ல முடியாது. பெரும்பாலான இடங்களில் பெண்களை ஆண்கள் அடக்கி ஆள்கிறார்கள். தன்னை ஈன்றவள் ஒரு தாய் என்பதை அறிந்தும் பெண்களை ஹிம்சிக்கிறவர்கள் மாறுடகத்தைக் கொச்சைப் படுத்துகிறவர்கள் ஆவார்கள். திருமணம் என்று வந்து விட்டால் பெண் வீட்டார் தான் மாப்பிள்ளை வீட்டாருக்கு தட்சணை கொடுக்க வேண்டியிருக்கிறது. எந்த தீய வழக்கத்தையும் நிர்ப்பந்தத்தினால் ஒழித்துவிட முடியாது. எனவே பெற்றோரும் வரதட்சணை முறையை ஒழிக்க முன் வர

—ஜி. மாதவராஜன

இந்த மலை கல் உடைப்பதற்காக ஏலத்தில் விடப்பட்டு, ஏலம் எடுத்தவர்கள் வேட்டு வைத்துத் தகர்த்து கல் உடைக்க ஆரம்பித்தார்கள். வேட்டு வைத்து தகர்த்து வரும் பெரிய கற்கள் குடியிருப்புகளைப் பாதித்தன. இதனால் இரண்டொருவர் காயம் படவும் நேர்ந்தது. இதை எங்கள் சங்கர் நகர் அசோசியேஷன் எதிர்த்தது. வழக்கு நடந்தது. முடிவில் பண முதலைகளே வென்றார்கள். அதன் பிறகு இந்த ப்ளாட்டுகளில் வீடுகள் எதுவும் கட்டக் கூடாது என்று பம்மல் பேரூராட்சி தடை விதித்தது. அதன் பிறகு யாரும் இங்கு வீடு கட்டிக் கொள்ள வில்லையாதலால் நாங்கள் மட்டும் இவ்வட்டாரத்தில் இருந்து விட வேண்டிய துர்பாககிய நிலை ஏற்பட்டு விட்டது" என்று மிகவும் வருத்தப் பட்டு கூறினர் அங்குள்ளவர்கள்.

அரசாங்கம் அங்குள்ள ப்ளாட்டுகளுக்கு அப்ரூவல் தந்து, அதன் மூலம் மற்றவர்களும் வந்து குடியேறும் வகையில் நடவடிக்கை எடுப்பதுடன், மின்சாரம், டெலிபோன் போன்ற வசதிகளையும் செய்து கொடுத்தால் அங்குள்ளவர்களைப் பாதுகாக்க முடியும் போல் தோன்றுகிறது. இல்லையெனில் இன்னொரு கொள்ளை நடந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

—வேடிக்

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

# முகமூடிக் கொள்ளையர்கள்

சமீபத்தில் சென்னை நகரை உலுக்கி எடுத்த முகமூடிக் கொள்ளைக் காரர்களின் செயல் கொடூரமானது. சவுக்குக் கட்டைகளினாலும், கத்தி, கோடாரி போன்ற ஆயுதங்களினாலும் மூர்க்கத் தனமாகத் தாக்கி, மக்களின் உடமைகள் கொள்ளையடிக்கப் பட்டிருக்கின்றன.

தாக்குதலுக்கு ஆளான உடன் போலீசுக்கு அவசரத் தகவல் கொடுக்கலாமென்றால் பம்மலில் பொதுத் தொலை பேசி எதுவும் இல்லாதது குறிப்பிடத் தக்கது.

மேலும், மின் இலாக்காவின் மெத்தனத்தால் இப்பகுதி இரவு முழுவதும் இருள் சூழ்ந்து காணப்படுகிறது.

பம்மலில் கொள்ளைக் காரர்களின் தாக்குதலுக்காளாகிய திரு. சம்பத் மற்றும் சிலரைச் சந்தித்தோம். பம்மலுக்கு மேற்கே 'செங்கழுநீர் மலை' என்று அழைக்கப்படும் குன்றின் அருகில் சங்கர் நகர் அமைந்து இருக்கிறது. அப்பகுதியில் பல வீடுகள் இருந்தும், கொள்ளையடிக்கப்பட்ட வீடுகள் மட்டும் ஒதுங்கியும், ஓரமாகவும் அமைந்து இருப்பதால் கொள்ளைக் காரர்களின் கவனத்தை வலுவாக ஈர்த்திருக்கிறது. அப்பகுதியில் மலையின் ஓரத்தில் ஏராளமான ப்ளாட்டுகள் காலி மைதானமாகக் காட்சியளிக்கிறது.

காலி மைதானமாகக் கிடக்கும் இந்த வெற்று இடங்களில் வீடுகள் நிறைய வந்து விட்டால் எங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்றார் மற்றொருவர். "ஏன் இங்கு வீடுகள் கட்டிக் கொள்ள மற்றவர்கள் முன் வரவில்லையா?" என்று கேட்டதற்கு,

"...சுமார் 15 வருடங்களுக்கு முன் ரியல் எஸ்டேட் ஏஜெண்ட் அப்பாசாமி என்பவர் இவ்விடங்களை எங்களுக்கு லே-அவுட் போட்டு விற்றார். அப்போது இங்கேயிருக்கும் மலையை ப்ளானில் காட்டாமல் ப்ளாட்டுகளை மட்டும் எங்களிடம் காட்டி விற்று விட்டார். நாங்களும் வீட்டைக் கட்டிக் கொண்டு இங்கு வந்து குடியேறி விட்டோம். பின்பு


FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

# கிரேனடாவில் என்ன?

கரீபியன் கடலில் சென்னை நகரத்தைப் போல் சுமார் 2½ மடங்கு அளவுள்ளதும், நம் திண்டுக்கல்லை விடக் குறைவான மக்கட்தொகை உள்ளதுமான எலிக்குட்டி நாடு கிரேனடா. பகாசுர நாடான அமெரிக்கா 25—10—83 அன்று இந்நாட்டின் மீது அநீதியாக படையெடுத்து ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

1974 இல் தான் பிரிட்டனிலிருந்து இத்தீவு விடுதலை பெற்றது. முதல் பிரதமர் எரிக் கெய்ரி. வலது சாரி; பயங்கர ஊழல் பேர்வழி. 1979இல் ராணுவத்தின் உதவியுடன் புதிய அணிகலக்கட்சி தலைவர் மாரீஸ் பிஷப் ரத்தம் சிந்தா புரட்சி செய்தார். இடது சாரி புதிய அரசு பிறந்தது. கியூபா, நிகராகுவா, சோவியத் போன்ற சோஷலிச நாடுகளுடன் தொடர்புகளை வளர்த்தார்.

இந்தப் போக்கு அமெரிக்காவின் கண்ணில் தூசியானது. தென்னமெரிக்க நாடுகள் சோஷலிச முகாம்களாக மாற தாகங் கொண்டுவரும் போக்கினை அமெரிக்காவால் தாங்க முடியவில்லை. பிஷப் ஜூன் மாதம் அமெரிக்கா சென்றார். அங்கு என்ன பேரம் நடந்ததோ தெரியாது. பிஷப் ஆட்சி மட்டும் கட்சியின் லட்சியங்களுக்கு எதிரானது. கூட்டுத் தலைமையிலிருந்து நழுவி, தனிநபர் ஆதிக்கம் செலுத்தினார் என ராணுவம் பிஷப்பை எதிர்த்துப் புரட்சி செய்தது. வீட்டிலேயே சிறை வைத்தது. 20—10—83 அன்று ஒரு கும்பல் அவரை சிறையிலிருந்து மீட்டு வர முயன்றபோது ராணுவம் எதிர்த்தது இந்தக் கலவரத்தில் பிஷப் சுட்டுக் கொல்லப்பட்டார். புதிய அணிகலக் கட்சி ஆட்சியே தொடர்வதாக தலை நகர் வானொலி அறிவித்தது.



தன் கையாளை இழந்த அமெரிக்கா, 22-10-83 அன்று 2000 கப்பற் படை வீரர்களை அந்நாட்டின் மீது ஏவியது. 25-10-83இல் ஆக்கிரமித்துக் கொண்டது.

மனித உரிமைகள் மீறப்பட்டதைத் தடுக்கவும், கலவரத்தில் அந்நாட்டிலுள்ள அமெரிக்கக் குடிகளை மீட்கவும்; பிற அண்டை நாடுகள் கேட்டுக்கொண்டதற்காகவும் படைகளை ஏவியதாக அமெரிக்கா பச்சையாக சால்ஜாப்பு சொல்கிறது!

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

## துணுக்குகள்

இங்கிலாந்து நாட்டு மான்செஸ்டரைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 'பென்டோடைட்' என்ற ஒரு புதுவித ஆடையைத் தயாரித்துள்ளனர். இவை மெல்லிய இழைகளைக கொண்டு தயாரிககப் பட்டவை. இவை 'சுமை'யாக இல்லாமல் சுகமாக உள்ளதாம். காற்று உடலில் பட ஏதுவாக நெய்யப் பட்டுள்ளதாம். இவை தீப்படையினர், காவலாளிகள், பாதுகாப்பு படையினர், எண்ணெய் ஆலையில் வேலை செய்பவர்கள் போன்றவர்களுக்கு மிகவும் உதவுகிறதாம்.

## மானம் காக்கும் சிவப்பு விளக்கு

தகவல்: கே. சரவணன்

சிவப்பு விளக்கென்றாலே விலை மகளிரிடம் உங்கள் எண்ணம் செல்கின்றதல்லவா? நியாயம்தான். தவறில்லை. ஆனால் அதே சிவப்பு விளக்கு மருத்துவர்களின் மானத்தைக் காக்கிறது. ஆச்சரியமாக இருக்கிறதா?

பண்டைக்காலத்தில் சீனாவில் மருத்துவர்களின் வீட்டின் முன்னால் சிவப்பு விளக்கு மாட்டப்பட்டிருக்கும். மருத்துவர் ஒரு நோயாளிக்கு சிகிச்சையளித்தும் , பலன் இல்லாமல் நோயாளி இறந்துவிட்டால் அந்த மருத்துவர் தன் விட்டின் முன்னால் ஒரு சிவப்பு விளககை மாட்டி வைகக வேண்டும். அதனால் எந்த மருத்துவரின் வீட்டின் முன்னால் சிவப்பு விளககு குறைவாக உள்ளதோ அவரே சிறந்த மருத்துவர்.

ஆதாரம்: கோவை வானொலி

28-10-83இல் ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் கயானீஸ் நாடு அமெரிக்காவின் இந்த ஆக்கிரமிப்பைக் கண்டித்து தீர்மானம் போட்டது. பிரான்ஸ், நெதர்லாந்து, சோவியத், போலந்து, சீனா, ஜோர்டான், மால்டா, பாகிஸ்தான், கயானா, நிகராகுவா, சிம்பாவே ஆகிய 11நாடுகள் இத்தீர்மானத்துக்கு ஆதரவு தந்தன. பிரிட்டன் வாக்களிப்பிலேயே பங்கு கொள்ளவில்லை.

தனக்கு ஒத்துவராத ஆட்சி நடக்கும் நாடுகளில் தலையிடுவதும், அச்சுறுத்துவதும் அமெரிக்காவிற்கு உலக அரங்கில் மோசமான ஆக்கிரமிப்பாளன் என்ற பெயரை ஏற்படுத்தி வருகிறது!

—உலகப்பன்

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

# தண்ணீரில் தேடுகிறீர்களோ!




FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

# ஈழத்து விடுதலைக் கவிஞர் காசி ஆனந்தன்

ஈழத்துக் கவிஞரான காசி ஆனந்தன் காத்த முத்து—அழகம்மா தம்பதி-யருக்கு மகனாக இலங்கை மட்டக்களப்பு பகுதியிலுள்ள நாவற்குடா என்னும் சிற்றூ-ரில் பிறந்தார்.

1959 முதல் 1960 வரை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்து புலவர் பட்டம் பெற்றார். இவரின் படைப்புகள் அனைத்துமே கவிதைகள் தான். 1952 இல் இலங்கை என்ற பெயரை 'ஸ்ரீ லங்கா' என்று மாற்றியதை எதிர்த்து 'ஸ்ரீ' என்ற எழுத்தை தார் பூசி அழித்தார். இதன் காரணமாக சிறை சென்றார்.

தான் பணிபுரிந்து வந்த அரசாங்க உத்தியோகமான 'மொழி பெயர்ப்பாளர்' பதவியைத் தூக்கி எறிந்ததன் காரணமாகவும் சிறை செல்ல நேர்ந்த போதும் சிறையில் கவிதை பாடினார். சிறைச் சாலையில் தாக்குதலுக்கு ஆளானதால் காச நோய்க்கு ஆளானார். சுமார் ஆறு வருடங்கள் மருத்துவ மனையில் இருக்க நேர்ந்தது. அப்போதும் கவிதை பாடினார்.

இலங்கை அரசு காசி ஆனந்தனின் குடும்பத்தினர் அனைவரையும் சிறையிலடைத்தது. எதைப்பற்றியும் கவலை கொள்ளாத இககவிஞர் 'தமிழ் ஈழம்' ஒன்றே தன் வாழ் நாளின் லட்சியம் என்று தனது மரண சாசனத்தில் எழுதி வைத்துள்ளார்.

இவரது கவிதைத் தொகுப்பு ஒன்றை மதுரையிலுள்ள அவர் தம் நண்பர்கள் வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் உருவாகக் காரணமாக இருந்தது இவரது கவிதைகள் தான்! தனித் தமிழ் ஈழம் காணாமல் சாகமாட்டேன் என்று தனது கவிதையால் சபதமெடுத்துள்ளார். இந்தக் கொள்கைக் கவிஞர் தமிழர்களின் உள்ளங்களில் என்றும் பிரகாசித்துக் கொண்டிருப்பார் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை!



—ஜெகவை. பால்ராஜ்

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

# 'சோ'வும் ஜனதாவும்



குமுதத்தைப் போல் மசாலா விஷயங்களை பிரசுரித்தால் தான் பத்திரிகை நடத்த முடியும் என்ற நிலையை மாற்றி 'ஒரு அரசியல் விமர்சனப் பத்திரிகையையும் வெற்றிகரமாக நடத்த முடியும்' என்று நிரூபித்தவர் சோ.

1970 முதல் 83 அக்டோபர் வரை இவர் எந்தக் கட்சியிலும் சேர்ந்து விடாமல் அகில இந்திய அரசியலை விமர்சித்து வந்திருக்கிறார்.

இந்திரா முதல் நம் ஊர் கருணாநிதி, எம்ஜிஆர் வரை இவரால் சாடப்படாத அரசியல் பிரமுகர்களே இல்லை எனினும், ஜனதாகாரர்களை மட்டும் சற்று கரிசனத்துடன் தான் விமர்சித்து வந்திருக்கிறார். துக்ளக்கின் வாசகர்களுள் சோவின் கருத்தை ஒப்புக் கொள்ளாதவர்கள் கணிசமான அளவு உள்ளனர். இதற்கு காரணம், இதுவரை அவர் எந்த அரசியல் கட்சியிலும் அங்கம் வகிக்காததே ஆகும்.

'துக்ளக்' எந்த விதமான அரசியல் கட்சியின் சார்பும் இல்லாத பத்திரிகையாகத் தான் இருக்கும் என்று முதல் இதழில் பிரகடனம் செய்திருக்கும் இவர் சென்ற அக்டோபர் 16-ஆம் தேதி திருச்சியில் நடந்த ஜனதா கா. கா. தே. கா. இணைப்பு மாநாட்டின் போது ஜனதாவில் சேர்ந்ததின் மூலம் தன் தனித்தன்மையை இழந்திருக்கிறார்.

"நான் ஜனதா கட்சியில் சேர்ந்திருந்தாலும் அக்கட்சியையும் துக்ளக்கில் நேர்மையுடன் விமர்சிப்பேன்" என்று இவர் கூறுவதைப் பார்த்தால் 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்னும் பழமொழியே நம் நினைவுக்கு வருகிறது.

அடுத்து வரவிருக்கும் தேர்தலின் போது, இந்திரா தென் சென்னை வேட்பாளராகப் போட்டியிடுவார் என்றும் அவருக்கு எதிராக தேசிய அளவில் அனைவருக்கும் தெரிந்த சோவை நிறுத்துவதற்காகத்தான் இந்த ஏற்பாடு நடந்திருக்கிறது என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

—ஜி. மாதவராஜன்

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

# நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானியும் தமிழ் தினசரிகளும்

உலகம் புகழும் பரிசான நோபல் பரிசை தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானி அமெரிக்க விஞ்ஞானி ஒருவருடன் கூட்டாகச் சேர்ந்து பெற்றுள்ளார்.

1983-ஆம் ஆண்டு பௌதீகத்திற்கான இப்பரிசை பெற்றிருக்கும் அந்த விஞ்ஞானியின் பெயர் டாக்டர் எஸ். சந்திர சேகர். இவர் 1930-ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற முதல் இந்திய விஞ்ஞானியான சர். சி. வி. இராமனின் அண்ணன் மகனாவார். 1910-ஆம் ஆண்டு லாகூரில் பிறந்த இவர் சென்னை இந்து உயர்நிலைப் பள்ளியிலும், பின் மாநிலக் கல்லூரியிலும் கல்வி கற்றார்.

பின்பு இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற இவர் 1937-இல் சிகாகோ பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பதவி ஏற்றார். இந்திய அரசு இவருக்கு பெருமைக்குரிய பரிசான 'பத்ம விபூஷன்' பட்டத்தை வழங்கி கௌரவித்திருக்கிறது. அமெரிக்கா இவருக்கு ஆதம் பரிசு, ராயல் பதக்கம், தேசிய விஞ்ஞான பதக்கம் ஆகிய உயர்ந்த விருதுகளையும் வழங்கி கௌரவித்திருக்கிறது.

தன்னை நாத்திகவாதி என்று கூறிக்கொள்ளும் இந்த 74 வயதுக்காரர் தன்னுடைய 29 வயதில் நட்சத்திர மண்டலத்தைப் பற்றி வெளியிட்ட கண்டுபிடிப்பிற்குத்தான் இந்த ஆண்டு நோபல் பரிசைப் பெற்றுள்ளார். 44 வருடங்கள் காத்திருந்து இவர் பெற்றுள்ள இந்த நோபல் பரிசின் மதிப்பு ரூ. 20 லட்சம்.

லாட்டரியில் பரிசு பெறும் நபர்களை முதல் பக்கத்தில் புகைப்படத்துடன் வெளியிட்டுக் கௌரவிக்கும் நமது தினசரிகள் இவர் நோபல் பரிசு பெற்ற விவரங்களை உள் பக்கங்களில் சிறு செய்தியாகவே வெளியிட்டிருக்கின்றன. வேறு சில பத்திரிக்கைகள் இந்த விபரங்களை வெளியிடவேயில்லை. செய்திகளின் தரம் அறியாதவர்கள் எல்லாம் தமிழ்நாட்டில் தினசரிகளை நடத்துகிறார்களே என்று நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது. —பம்மல் மணிமொழி

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

# எமக்கு கிடைத்தவை

**பூமிக்கு புரிய வைப்போம் :** (கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: தமிழ்மகள், கிடைக்குமிடம்: பஃறுளிப் பதிப்பகம், 7, செல்லப்ப தெரு, சென்னை-600012. விலை: ரூ. 6.00

**மறுபக்கம் :** (கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: அரசு, கிடைக்குமிடம்: விஜயா பதிப்பகம், 6, ராஜு வீதி, கோவை-641001. விலை: ரூ. 5.00

**நெஞ்சு பொறுக்குதிலையே :** (கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: கவிஞர் ப. கணேசன். 33, தெற்கு ரத வீதி, வடிவீஸ்வரம், நாகர் கோவில்-629001, குமரி மாவட்டம். விலை: ரூ. 5.00

**அடித்தளம்** (கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: செங்கண்மா முருகு, கிடைக்குமிடம்: அறிவொளி வெளியீடு, ஒன்றிய அலுவலர் குடியிருப்புத் தெரு, துக்காப் பேட்டை, செங்கம்-606709, வட ஆற்காடு விலை: ரூ. 3.00

**பூபாள ராகங்கள் :** (கவிதைத் தொகுப்பு)
தொடர்பு முகவரி: பூபாள ராகங்கள், காட்டு வளவு, திருப்பூர்-638604. விலை: 30 காசு

**ஈழ நினைவின் எரிமலைச் சிதறல்கள் :** (கவிதைத் தொகுப்பு)
தொகுத்தவர்: 'தேவா' கிடைக்குமிடம்: 175, அண்ணா சாலை, வேலூர்-638182, சேலம் மாவட்டம். விலை: போடவில்லை.

**சிந்தனையாளன் :** (வார இதழ்)
ஆசிரியர்: வே. ஆனைமுத்து, முகவரி: 5, லால்பேகம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005, ஆண்டு சந்தா: ரூ. 30.00 ஆயுள் சந்தா: ரூ. 300, தனியிதழ் 60 காசு.

**தமிழ் நிலம் :** (வார இதழ்)
ஆசிரியர்: பாவலரேறு பெருஞ்சித்திரனார், முகவரி: அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. ஆண்டு சந்தா ரூ 36 00 அரையாண்டு சந்தா ரூ 18 தனியிதழ் 65 காசு

**அந்தமான் எக்ஸ்பிரஸ் :** (வார இதழ்)
ஆசிரியர்: K. கந்தசாமி, முகவரி: பாபு லேன், போர்ட்பிளேர்-744104. தனியிதழ்: 65 காசு.

**சுகந்தம்.** (மாத இதழ்)
ஆசிரியர்: சி. பன்னீர்செல்வம், 16, காளியங்கராயன முதலாம் தெரு, சிமிட்டெரி சாலை, சென்னை-600021. தனியிதழ் ரூ 1.00 ஆண்டு சந்தா ரூ 10.00

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

## ஹோமியோபதி டாக்டர்களுக்கு அநீதியா?
## ஹோமியோபதி டாக்டர்கள் பரி தவிப்பு!

ஐயா,

ஹோமியோபதி டாக்டர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் ஆக்கப்பூர்வமான உதவிகளையோ, சட்டப் பூர்வமான செயல்களையோ இது வரை செய்து தரவில்லை என்ற மனத் தாங்கலோடு இருந்து வந்த எங்களுக்கு,

21.8.81 ஆம் தேதிக்கு முன் ஆந்திராவில் இருக்கும் கிறிஸ்துவ நிறுவனம் ஒன்று ஹோமியோபதி டாக்டர்களான எங்களுக்கு உதவி செய்ய முன் வருவதாகக் கூறி திருச்சி மாவட்ட தமிழ் சங்கக் கட்டிடத்தில் அரசு பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்களை 21.8.81 ஆம் தேதி நேர் முக தேர்வு செய்து தேர்ந்தெடுத்தது.

இது போல் சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களிலும் தேர்வு நடத்தி சுமார் 400 டாக்டர்களைத் தேர்வு செய்து 20.1-82 ஆம் தேதி கிராமங்களில் 'இலவச மருத்துவ மனை' திறக்க அப்பாயின்மெண்ட் ஆர்டர் கொடுத்து பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் செயல்படவேண்டுமென்று உத்திரவு போடப்பட்டது.

அதன்படி நாங்கள் அனைவரும் எங்கள் செலவில் விழா நடத்தி திறப்பு விழா செய்தோம்.

எங்களிடம் தலா ரூ 500/. வீதம் டெபாசிட் வாங்கிக் கொண்டார்கள். 26.1.86 ஆம் தேதி ஆர்டர் தரும போது ரூ 10/. மதிப்புள்ள மருந்துகளை மட்டுமே கொடுத்து 'பின்னா மருந்து வரும்' என்று கூறினார்கள்.

சம்பளம் ரூ 350/-, வாடகை ரூ 50/. ஆக ரூ 400/- மட்டும் மாதா மாதம் 5.ஆம் தேதிக்குள் மணியார்டர் மூலம் வரும் என்று கூறிச்சென்றார்கள். ஆனால் இது வரை சம்பளமோ, வாடகையோ, மருந்து வகைகளோ எதுவும் வரவில்லை தவிர,

இலவச மருத்துவமனை என்று போர்டு போட்டதால் ஏற்கனவே எங்களுக்கு உள்ள கொஞ்ச நஞ்சத் தொழிலும் பாதித்து விட்டது.

இலவச மருத்துவமனை என்று போர்டு போட்டு, மருந்துகள் இல்லாததால் கெட்ட பெயரும், அவமானமும் அடைய நேரிட்டது.

இதுவரை இது பற்றி அரசுக்கு பலமுறை புகார் செய்தும் பலனில்லை. நலிந்த எங்களுக்கு இது மேலும் ஒரு பேரிடியாகி விட்டது. வாடகை தராததால் கட்டட காரர்கள் எங்கள் மருத்துவச் சாமான்களைப் பிடுங்கி வைத்துக் கொண்டார்கள்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

இது பற்றி திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நேரில் சந்தித்து விளக்கம் கூறி, மனு கொடுத்தோம். எந்த நடவடிக்கையும் இல்லை.

மிஷனரி டைரக்டரிடம் இது பற்றி விசாரித்ததில், "நாங்கள் அவர்கள் பணத்தை மோசடி செய்யவில்லை. பாங்கில் போட்டு இருக்கிறோம் என்று பதில் கிடைக்கிறது. பணம் பாங்கில் இருந்தால் எங்களின் அடுப்பு புகையுமா? குழம்பிய நிலையில் இருக்கும் எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை

சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ, மற்றவர்களோ சிந்திக்க வேண்டாமா? மாதம் 18 க்குமேல் ஆகிறது. எவ்வித நடவடிக்கையும் இல்லை. அரசும், அதிகாரிகளும் கிருஸ்துவ மிஷனரி சம்பந்தப்பட்டவர்களும் நியாயமான நடவடிக்கைகளை எடுத்து எங்களுக்கு உதவ முன் வருவார்களா?

இப்படிக்கு,

Dr. K. P, கதிரேசன் சாஸ்திரி
C. M. C. S S டாக்டர்கள் அமைப்பு செயலாளர்.
தமிழ் நாடு ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம்,
கல்லக்குடி-2, திருச்சி மாவட்டம், PIN.621 651.

கிருஸ்துவ மிஷனரி டைரக்டரின் முகவரி :
Dr. DAVID
CHRISTIANMISSIONARYCHARITABLE SERVICE SOCIETY,
PUNGANUR, ANDRA PRADESH.

ராமநாதபுரம் மாவட்ட மிஷனரி தலைவர் முகவரி :
Dr. R. S. V. JAYALIAL RAJ, PRESIDENT,
CHRISTIAN MISSIONARY CHARITABLE SERVICE
R. S. Mangalam, Ramanathapuram, Dist.

**மறதி**

ஓ...அரசியல் வாதிகளே!
மூலைக்கு மூலை...
வீதிக்கு வீதி...
கொடி ஏற்றி
வைக்கும் போது—
உங்கள்
கொள்கைகளையும் அல்லவா
காற்றில்
பறக்க விடுகின்றீர்கள்!

—வலங்கை தமிழ் வேந்தன்

படைப்புக்களை அனுப்பும் படைப்பாளிகள் தெளிவான கையெழுத்துக்களுடன் புரியும் படியாக எழுதி அனுப்பவும். இல்லையெனில் உங்களின் தரமான படைப்புகள் கூட பிர-சுரிக்க முடியாமல் போகலாம்.

—ஆசிரியர்




# தேங்காய் மருத்துவம்

□ 'ஓர் ஆண்டுக்கு எவ்வளவு நாட்கள் உண்டோ, அவ்வளவு உபயோகமுள்ளது தேங்காய்' என்கிறார்கள் இந்தோனேஷியர்கள். தென்கிழக்கு ஆசியாவுக்கே சொந்தமான தேங்காயை, ஐரோப்பியர்களுக்கு வியப்புடன் வர்ணித்து: அறிமுகப்படுத்தியவர் மார்கோ போலோ தான்.

□ மூல நோய்க்குத் தேங்காயை அடிக்கடி சேர்த்தால் உக்கிரம் குறையும்.

□ வாய்ப் புண்ணுக்குத் தேங்காய் துருவலை வாயில் போட்டு மென்று அதையே உதட்டிலும் தடவி வர புண் ஆறும்.

□ வயிற்றுக் கட்டி நீங்க, சில தேங்காய் கீற்றுகளை உப்புக்குள் அமிழ்த்தி வைத்திருந்து மறுநாள் ஒரு கீற்று சாப்பிடவும். உடல் நிலைக்கேற்ப 3 நாள் சாப்பிட கட்டி நீங்கும்.

□ கீரைப்பூச்சி வயிற்றிலிருந்து வெளியேற ½ மூடி தேங்காயைத் துருவி பால் எடுத்து வெறும் வயிற்றில் சாப்பிடுக.

□ தேங்காய் பருப்பு இரத்தத்தைச் சுத்தி செய்யும்; கீல வாதம், பாரிச வாதம் போகும்; தாதுவை உண்டாக்கும்.

□ இடுப்பு வலியை போக்கவும், வாய் துர்நாற்றத்தை நீக்கவும் ஆற்றலுடையது தேங்காய்.

□ தேங்காயில் உள்ள சத்துக்களின் சதவீதம்:—
நீர்—36.3; புரதம்—4.5; கொழுப்பு—41.6; கார்போஹைடிரேட்—13.00; சிற—4.6; 100 கிராம் தேங்காயில் 1.7 கி இரும்பு; 0.01 கி கால்சியம்; 0.24 கி பாஸ்பரஸ் ஆகிய சத்துக்களும் உண்டு. தேங்காய் சிறந்த கொழுப்புப் பொருளாயினும் எளிதில் சீரணமாகும் சிறப்புடையது. மற்ற எண்ணெய்களைவிட தேங்காய் எண்ணெய் சுலபமாக சீரணமாகும்.

—சித்தன்

(அடுத்து நமது கசகசா மருத்துவம்)

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

அலங்கார விளக்குகள் ஒளியுமிழ்ந்து கொண்டிருந்தன. தலைநகரின் கலகலப்புகள் சாலை நெருங்கிய வேளை; பகல் முழுவதும் எப்படி எப்படியோ உழைத்துக் களைத்த மனித ஜீவன்கள் கூடுகளுள் குமைந்து கொண்டிருக்கும். மாடியின் மனிதர்கள் குளிர் அறைகளில் குதூகலத்தில்... இரவைப் பகலாக்கும் ஹோட்டல்களில் வெறியாட்டம். தலைநகர் தனது தனித்துவத்துடன்...

நாட்டின் அழகை உயர்த்திக் காட்ட முனைந்தவர்கள் பெருகும் சேரிகள் அப்படியே இருக்க சுற்றி வர கட்டிடங்கள் எழுப்பினர். சந்திகளில் அலங்கார பீடங்கள், விதம் விதமான சோடனைகள், விளக்கு அலங்காரங்கள்.

வளர்ந்து வரும் 'ஏழை நாடு' என்பவர்களே செய்யும் வேடிக்கை.

சிறுகதை

# சிலையும் நிலையும்

—காவலூர் எஸ். ஜெகநாதன் (இலங்கை)

'லேக்கவுஸ்' சந்தியடியில் ஒளி வெள்ளத்தில் மிதக்கும் அலங்கார பீடம்... அதன் ஓரமாக கீழே இறங்கினால் இருளில் மனிதப் பூக்கள் இவ்விடம் கூட இல்லாமல்... ஓ... இருள் தானே மறைத்து விடும் என்ற எண்ணம் போலும்.

"சர்..." என்று வந்து வளைவில் திரும்பும் ஒரு உயர்ந்த ரகக் கார்.

'பொது பொது' வெனத் துள்ளி இறங்கும் வெளி நாட்டவர்கள் மூவர். முன்னால் வழி காட்டிய படி நம்மவர்— 'கைடு'.

இருக்கும் ஒளியை வெல்லும் 'பளிச் பளிச்' படமெடுக்கிறார்கள். "பியூட்டி...பியூட்டி" அவர்களிடம் ஓயாத முணுமுணுப்பு. பீடத்தின் நடுவிலே ஒளிக்கற்கள் பதித்த அற்புதமான கலைப் படைப்பு, சுற்றி வர மரஞ்செடிகள், கொடிகள் தண்ணீர் ஊற்று...

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

ஒரு வெளி நாட்டவன் கூர்ந்து பார்த்து... "ஊ"... என்று கை நீட்டுகிறான். ஓர் ஏழையின் சிலை தத்ரூபமாக... கந்தை உடை, சோகம் ததும்பும் முகம் .. கலைந்த தலை, எவ்வளவு யதார்த்தமாக சிலையை வடித்திருக்கிறார்கள். அற்புதம்... அபாரம், ஏழ்மையும் கலைஞன் கை பட்டு... காட்சிக்கு உகந்ததானது.

கைடு விளக்குகிறார்.

"இந்த அரசாங்கம் ஏழைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களது மலர்ச்சிக்காகவே பாடுபடுகிறது... அதனை எடுத்துக் காட்டத்தான் இந்தச் சிலையையும் இங்கே வைத்திருக்கிறார்கள்.

"பளிச் பளிச்" மாறி மாறிப் படமெடுத்தார்கள்.

அவர்களுக்குள் ஆசை... இவ்வளவு யதார்த்தமான சிலையை அண்மையில் சென்று பார்க்க வேண்டும்.

போனார்கள், ஆட்கள் அருகில் சுற்றி வளைப்பதை உணர்ந்ததும் "பசி...பசி" என்று முணு முணுத்த படியே சரிந்து விழுந்தான். மயக்கத்துடன் அமர்ந்திருந்த அந்தப் பிச்சைக்காரக் கிழவன்.

இப்போது—இவர்கள்—சிலையானார்கள்.

## ஞானோதயம்

அம்மா ஏவாளே
ஐயா ஆதாமே
அன்று
ஏதேன் தோட்டத்தில்
சாத்தான் கொடுத்த
கனியைப் புசித்த பிறகுதான்
வெட்கம்... மானம்
உண்டாயிற்று என்றால்
எதிர்காலத்தின்
நலன் கருதியாவது
இன்னும் சிலவற்றைச்
சேர்த்துச் சாப்பிட்டிருக்க-
லாம்!

—ராசாராம் பாண்டியன்

## சாதி ஒழிப்பு

அடையாளமாய் நட்டனர்
ஒரு செடியை
அதைச் சுற்றி
வீடும் கட்டினர்
செடி—
மரமாகி
கோரக் கிளைகளுடன்
வீட்டையே
தகர்த்துக் கொண்டிருக்கை-
யில்
வேரோடு வெட்டி
யெறியாமல்
வெறும் இலைகளை மட்டும்
பிடுங்கிக் கொண்டிருக்-
கின்றனர்

—M. A. ஸ்ரீராம்

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011


# AMRUTANJAN

**Your medicine chest for aches, colds and sprains**




AMRUTANJAN LTD. MADRAS-4


FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011



எந்த நேரமும் யாரும் இதனை விளையாடும் வசதியே இதன் சீரழிவை மிகுவிக்கிறது. சூதாட்டத்திலே மட்டமான சூதாட்டம் சீட்டாட்டம் தான்.

# சீரழிக்கும் சீட்டாட்டம்

சீட்டாட்டம் வெறும் விளையாட்டாக இருப்பதில் தவறில்லை தான். காசு வைத்து ஆடும்போது தான் அது போதையூட்டும் ஆட்டமாக மாறுகிறது. மரத்தடியில் "மங்காத்தா" (வெட்டுச் சீட்டு) ஆடுவோரிலிருந்து, ஏசி செய்யப்பட்ட கிளப்புகளில் ஆடும் பெரும் புள்ளிகள் வரை பணம் வைத்து ஆடும் போது போதையூட்டும் வெறியோடு தொடர்ந்து ஆடுகிறார்கள் பிற கெட்ட பழக்கங்களும் சீட்டாடுவோருடன் எளிதில் தோழமை கொள்ளும்.

பணம் வைத்து சீட்டாடுவது சட்டப்படி குற்றம். ஆனால் கிளப்புகளில் கலர் கலரான டோக்கன்களை பயன் படுத்துகிறார்கள். கடைசியில் பணத்திற்கு டோக்கன்களை மாற்றுகிறார்கள். சட்டத்திற்கு டிமிக்கி கொடுக்கிறார்கள்! வெளியுலகம் தெரியாமல்



சில கிளப்புகளில் காலை முதல் இரவு வரை சீட்டாட்டம் நடைபெறுகிறது. கை குறைந்தால் ஒத்துழைத்து ஆடக்கூட கூலிக்கு ஆள் வைத்திருக்கிறார்கள். சகல லாகிரி வஸ்துக்களும், தீனிகளும் இடைவிடாமல் வந்துக்கொண்டிருக்கும். ஆடுபவர்களை விடாமல் பிடித்துக்கொள்ள, கட்டின மனைவியை விடக்கூட அதிகப்படி பணிவிடை இந்த கிளப்புகளில் நடக்கிறது. டேபிள் காசு என்று வசூலிப்பதில் இந்த கிளப் நடத்துபவர்களுக்கு ரூ 500/- வரை கிடைக்கிறதாம்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

சீட்டாடும் நபர்கள், எம்.எல்.ஏக்கள், பிறபல அரசியல் வாதிகள் பெரும் புள்ளிகள், நடத்துவோரும் செல்வாக் குள்ளவர்கள். எனவே மரத்தடி சீட்டுக் கச்சேரிகளைப் பிடிப்பது போல போலீசார் இவர்களைப் பிடிக்க முடியுமா?

சென்னையில் மட்டும் இந்த மாதிரி கிளப்புகள் சுமார் 80 வரை உள்ளன. பெரம்பூரில் உள்ள ஒரு கிளப்பில் ஒரு குறிப்பிட்ட டேபிளில் இடைவெளிவிடாது கடந்த 9 வருடங்களாக தொடர்ந்து சீட்டாட்டம் நடக்கிறதாம்.

சீட்டுக் கட்டுக்களிலிருந்து ராஜா ராணிகளை உருவிப் போட்டு ஆடும் குடும்பத் தலைவர்களின் வீட்டு ராணிகளும் குழந்தைகளும் பாவம் எங்கெங்கு கண்ணீர் வடிக்கிறார்களோ! நகைகளை எந்த மார்வாடி கடையில் வைத்து இந்த பணயப்பணம் புரண்டு கொண்டிருக்கிறதோ!

குற்றாலத்தில் தான் பெரும் பணக்காரர்கள் கோடையில் மிக அதிக "ஸ்டேக்" (பணயம்) வைத்து ஆடுகிறார்கள். பணம் தீர்ந்து போனால் கடைசியாக கார் சாவியை வைத்து ஆடிவிட்டு காரையே இழந்து விட்டு நிறைய பேர் வருவதுண்டு.

இந்தப் பணக்காரர்கள் சீரழிவு ஒருபுறமிருக்க, ஏழைத் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் இந்த சீட்டாட்டப் பேய் பிடித்து, புத்தி தடுமாறியிருப்பதை அன்றாடம் காண முடிகிறது. தொழிற்சாலை வேலை நேரங்களில் நடுவில கழிவறைமுற்றத்தில் (பிடிக்க முடியாது!) சீட்டாடுவது சில தொழிற்சாலைகளில் சாதாரண நிகழ்ச்சி. ரயிலில் வேலைக்குச் செல்லும்போதும், திரும்பும் போதும், அந்த நெருக்கத்திலும் சமாளித்து அவசர சீட்டாட்டம் நடைபெறுவதை தினமும் பாசஞ்சர், மின்சார வண்டிகளில் பார்க்கலாம்.

கிரீசில் தோன்றியது இந்த சீட்டாட்டம்; இந்தியாவிலேயே தஞ்சாவூர் மாவட்டத்தில் தான் சீட்டாட்டம் அதிகம். வெற்றிலை, சீவல் புகையிலை போட்டுக் கொண்டு, சொம்பு சொம்பாக காப்பி சாப்பிட்டுக் கொண்டே, மணிக்கணக்கில், நாட்கணக்கில் சீட்டாடுவோர் தஞ்சையில் மிகுதி.

—ஸ்டெனிஸ்லாஸ்

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011



# சுட்டியார் பதில்!

O. S. பாலகிருஷ்ணன்
திருப்பரங்குன்றம்

*மாமியார் மருமகன் சண்டை, ஆளுங்கட்சி, எதிர்கட்சி சண்டை... ஒப்பிடுக?*

■ இந்திராவையும் மேனகாவையும் பொறுத்தவரை இரண்டும் ஒன்று தானே!

*இன்றைய நிலையில் எம்.ஜி.ஆர். ஆட்சியில் லஞ்சமும், ஊழலும் முழுமையாக ஒழிந்து விட்டது என எண்ணுகிறீர்களா?*

■ லஞ்சமும், ஊழலும் எம்.ஜி.ஆர் ஆட்சியில் முழுமையடைந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இப்படியொரு கேள்வியா?

T. இராஜசேகரன், திருச்சி-13.

*எல்லாவற்றையும் வெல்லக் கற்றுக் கொண்ட மனிதன் எதனை வெல்ல முடியாமல் தவிக்கிறான்?*

■ தன்னை!

செந்தில் முரளி, கோவை-2.

*பதினோரு முட்டாள்கள் விளையாடுவதை பதினோராயிரம் முட்டாள்கள் பார்க்கிறார்கள் என்று கிரிக்கெட்டைப் பற்றி பெர்னாட்ஷா கூறி இருக்கிறாரே, சுட்டியார் ஒப்புக் கொள்கிறாரா?*

■ பார்க்கும் முட்டாள்களின் எண்ணிக்கை பெருகி வருவதோடு அல்லாமல் ட்ரான்சிஸ்டர்களில் கேட்கும் முட்டாள்களுமல்லவா பெருகி வருகிறார்கள்.

T. K ஹரிதாஸ், திருபுவனம்

*அண்ணாவின் கொள்கையை ஏற்று ஆட்சி நடத்தும் அண்ணாவின் தம்பி எம்.ஜி.ஆர். ரூபாய்க்கு மூன்று படி கொடுப்பாரா அல்லது மூவாறு பிடி கொடுப்பாரா?*

■ அண்ணாதுரை வாக்குறுதியை வாரி வழங்கி விட்டு, ஆட்சிக்கு வந்த பின் ஏமாற்றினார். எம்.ஜி.யாரும் அவர் வழியில் நடப்பதாகத் தானே கூறிக் கொண்டிருக்கிறார்.

P. B. R. ராமச்சந்திரன்
சேலம்.7

*கலைஞரைப் போல் ஒரு சிறந்த தலைவர் இனித் தோன்ற வாய்ப்புண்டா?*

■ இந்த மாயை உங்களுக்கு மட்டுமல்ல, பல பேருக்கும் இருப்பது வருந்தத் தக்கது.

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

—இரணியல் தயா, சென்னை-29

**இத்தனை தோல்விகளுக்குப் பின்னரும் கலைஞர் துவண்டு போகாமல் இருக்கிறாரே?**

■ இன்னும் துண்டுகள் கிடைத்துக் கொண்டிருப்பதால்!

சுஜாதாபிரியன்—கோவை-19.

**நம் அரசியல் வாதிகளுக்கும் விபச்சாரிகளுக்கும் என்ன வித்தியாசம்?**

■ இருவருமே பணத்துக்காக சோரம் போகிறவர்கள் தானே!

—டி. எம். ஜே என். பாளையம்

**இலங்கைத் தமிழ் அகதிகளை ஆஸ்திரேலியா குடியேற அனுமதித்துள்ளது. இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட நிலை ஆஸ்திரேலியாவிலும் ஏற்பட்டால்?**

■ நம்மவர்கள் அதையும் அரசியலாக்கி ஆதாயம் தேடிக் கொள்வார்கள்.

—எஸ். மோகன், மேற்கு மாம்பலம்

**கா. கா. தே கா ஜனதாவுடன் இணைந்திருப்பது குறித்து?**

■ அரசியல் கட்சிகளுள் ஒன்று குறைந்திருக்கிறதே!



**அரசியல் வாதிகள்**

வயிற்றுப் பசிக்கு
அன்னம் கிடைக்குமென்று
தான்
வாக்களித்தோம்
இவர்களோ
இன்னும்
அண்ணாவைப் பற்றியே
அளவளாவிக் கொண்டிருக்-
கிறார்கள்...

—பம்மல் மணிமொழி

ஆஸ்துமா காணே!

இனி கவலை வேண்டாம்! முப்பது வருட கால நோயாளிகளுங் கூட, மூன்றே மாதங்களில் வியக்கத்தக்க வகையில் குணமடைய நேரிலும் கடிதம் மூலமும் இலவச ஆலோசனை பெறலாம்.

முகவரி: சித்தஞானி-ஞானோதய வைத்தியர்,
Dr. C. K மாணிக்கவாசகம்,
செலந்தம்பள்ளி (PO). திருப்பத்தூர் (TK)-635653 (N A. Dt.)

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

## பாரதி நினைவகம்

☐ சமீபத்தில் எட்டயபுரத்தில் உள்ள பாரதி நினைவகத்துக்குச் சென்றிருந்தேன். பாரதி பிறந்த ஊரான எட்டயபுரத்தில் அவர் வீட்டுக்கு வழி காட்டிப் பலகை எதுவுமில்லை. விசாரித்துக் கொண்டு வீட்டை அடைந்த பொழுது மாலை மணி 3-00. வீடு பூட்டியிருந்தது. அதற்கு பொறுப்புள்ள நபர் காபி சாப்பிடச் சென்று விட்டதாகச் சொன்னார்கள். ஆனால், பலகையில் பார்வை நேரம்; 2 TO 5 என்றிருந்தது. மணி மூன்றுக்கு மேல் அரை மணி நேரம் அதிகமும் ஆகி விட்டது ஆள் வந்த பாடில்லை. ஏமாற்றத்துடன் திரும்பினேன். நகரங்களில் பாரதி கவிதைகள் சக்கை பிழியப் பட்டுக் கொண்டிருக்கிற வேளையில், பாரதி பிறந்த வீட்டிற்குப் பொறுப்பான ஆள் இல்லை. இதை அரசு கவனிக்குமா?

—நா. செந்தில் முரளி,
கோயம்புத்தூர்-2.

## குடும்ப கார்டுகள்

வட ஆற்காடு மாவட்டம், வேலூர் தாலுக்காவில், கீழ்க் கொத்தூர் கிராமம் உள்ளது இங்கு இருக்கும் சுமார் 1000 வீடுகளில் 300 வீடுகளுக்கு மட்டுமே குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. மற்ற வீடுகளுக்கு இது வரை வழங்கப்படவில்லை. இக் குறையைப் போக்க, தாலுக்கா உணவுப் பொருள் வழங்கும் அதிகாரியிடம் நேரில் சென்று முறையிட்டனர். ஆனால், இது வரை குடும்பக கார்டுகள் வழங்கவில்லை.

இங்குள்ள மக்கள் கெரஸின் கூட வாங்க முடியாமல் அலையும் நிலை பரிதாபத்திற்குரியது. இக்கிராமத்தில் உள்ள மற்ற மக்களுக்கும் ரேஷன் கார்டுகள் கிடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்வார்களா?

—கே. எம். செல்வமணி
(நண்பர்கள் நகர் நல மன்றம்)
குடியேற்றம்-632602.

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

## சத்துணவுத் திட்டம்

வேதாரண்ய மையப் பகுதியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி உள்ளது. இதில் சுமார் 1000க்கும் அதிகமான மாணவர்கள் பயின்றுவருகின்றனர். இதன் தலைமை ஆசிரியர் 6 மாதங்களுக்கு முன்பு சத்துணவுத் திட்டத்தில் பருப்பு கையாடியதாக மேலதிகாரிகளால்நடவடிக்கை எடுக்கப் பட்டு மன்னித்து விடப்பட்டார். எனினும், அவருடைய தன்னாட்சி தர்பார் தொடர்ந்து கொண்டு தானிருக்கிறது. மாணவர்களுக்கு கல்வித் தகுதி சான்றிதழ் வழங்க, ரூபாய் 10-இல் இருந்து ரூபாய் 100/- வரை லஞ்சம் கோரிப் பெறுகிறார்.

மேலும், என்னை என்ன செய்து விட முடியும்? எந்த சட்ட நடவடிக்கையும், "என்னை எதுவுமே செய்து விட முடியாது" என்கிறார். இந்நிலை அறிவு புகட்டும் கல்வி நிலையம் வர்த்தக நிறுவனமாக மாறி விட்டதே என்று வருந்தத் தோன்றுகிறது.

—S. நடராஜன்.
வேதாரண்யம்.614810.

## பாட நூல்கள்

நம் சென்னை பல்கலைகழகத்திற்கு உட்பட்ட பல கல்லூரிகளில் உப பாடப் பிரிவில் (Ancillary) வைக்கபட்டிருக்கும் பல பாட நூல்கள் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கின்றது. உதாரணமாக "அரசியல்" பாடநூல் சென்னை நகரத்திலேயே எந்தக் கடையிலும் கிடைக்கவில்லை. அதிக மாணவர்கள் படிக்கும் ஆங்கிலப் பதிப்புகளுக்கே இத்தனைப் பற்றாக்குறை என்றால் தமிழ் மொழியில் பயில்வோரின் நிலைப் பற்றி சொல்லவா வேண்டும்? தனிபட்ட நிறுவனங்கள் வெளியிடும் இந்தப் பாடநூல்களை பல்கலைக் கழகமே ஏற்று, உரிய நேரத்தில் மாணவர்களுக்கு பாடநூல்கள் கிடைக்க வழி செய்யலாமே! -சி. இரகுராமன்

## பட்டதாரியின் ஏக்கம்

பட்டம் பெற செலவிட்டப்
பணத்தில்
பசுக்களை வாங்கியிருந்
தால்
பாலாவது மிஞ்சியிருக்கும்
என் நம்பிக்கைகள்
பாழாவதும் மிஞ்சியிருக்கும்
—செந்தில் பாரதி

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

திரையுலகப் பிரமுகர்கள்:

# நடிகர் எம்.ஜி.ஆர். 5

[இதுவரை படிக்காதவர்களும் படிக்கலாம்]

தி.மு.க நாத்திகப் பிரச்சாரம் செய்து வந்த சுமார் 10 ஆண்டு காலம் எம். ஜி. ஆரும் கடவுளர் பாத்திரங்கள் ஏற்பதில்லை என்று கடுபிடியாக விளங்கினார். பல ஆண்டுகள் காங்கிரஸ் கதராடையும், பட்டையும், உத்தராட்ச மாலையுமாக தோற்றமளித்து, பலவித கடவுளர் வேடங்களில் நடித்து வந்த அதே எம். ஜி. ஆர் இப்போது தி.மு.க தொண்டர்கள் மத்தியில் தன்னைப் பெரிய பகுத்தறிவு சிங்கமாக காட்டிக் கொள்ள இப்படியொரு முடிவு எடுத்தார்.

''விக்கிரமாதித்தன்'' படம் இவரது இந்த முடிவால் காளியும், வேதாளமும் இன்றி வெளி வந்து படுதோல்வியுற்றது; தயாரிப்பாளர் கையைச் சுட்டது.



நெருங்கி வரும் 1967 தேர்தலில் பலதரப்பட்ட மக்களின் ஓட்டையும் பெற தி.மு.க தனது கொள்கைகள் ஒவ்வொன்றாக காற்றில் பறக்க விடத் தொடங்கியது. தன் உயிர்க் கொள்கையான திராவிட நாட்டையே கை கழுவியது. இந்தத் தளர்ச்சிப் போக்கைப் பயன்படுத்திக் கொண்டு, எம்.ஜி. ஆரும் தேவரின் தனிப்பிறவி, படத்தில் முருகனாகத் தோன்றி தனது கடவுள் மறுப்பு ஸ்டண்டுக்குச் சாவு மணி அடித்தார்.

காலத்திற்கேற்ப, மக்கள் ஏற்றுக் கொள்ளும் வசதிக் கேற்ப, எம். ஜி. ஆர் தன் படப் பாத்திரங்களில் தன் நிஜ வாழ்வு சாயலையும் அமைத்துக் கொள்வார். முதலில் கடவுள் நடிகர், பின் பகுத்தறிவு நடிகர், இப்போது முகாம்பிகை பக்தர்!

''சீ! முத்தக் காட்சிக்கு அனுமதியா? தமிழ்ப் பண்பாடே சீரழிந்து விடும்'' என்று 1978 இல் முத்தக் காட்சி தமிழ்ப்

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

படத்தில் இடம் பெற முயன்ற போது கொந்தளித்து அறிக்கை விட்டார் எம். ஜி. ஆர். முதலமைச்சர் எம். ஜி. ஆர் அல்லவா' எனவே அந்த "ஸ்டேட்மண்ட்" தேவைப்பட்டது ஆனால் நடிகர் எம். ஜி. ஆரின் படங்களில் முத்தத்தின் சத்தம் இன்னும் கேட்கிறதே :—

"உன் அதரமீதில் வைப்பேன். ஒரு அன்பு முத்தம் கொடுப்பேன்"—மர்மயோகி.

"காது கொடுத்துக் கேட்டேன். ஆஹா குவா குவா சத்தம். இனி கணவனுக்குக் கிடைக்காது. அவள் குழந்தைக்குத் தான் முத்தம்'—காவல்காரன்.

"முத்தமழை என்றால் என்ன? சொர்க்கம் ஒன்று உண்டா என்ன?"—அரசகட்டளை.

தமிழ்ப்படங்களில் 'செக்ஸ் காட்சிகள்' அதிகரித்து விட்டன என்று மத்திய அரசுக்கு புகார் கடிதமெழுதிய புனித முதல்வர் எம்.ஜி.ஆர். நடிகர் எம்.ஜி.ஆராக இருந்த போது. இதயக்கனி படத்தில் ராதா சலுஜாவின் மார்க்கச்சை முடிச்சினை அவிழ்த்ததும், நாளை நமதே படத்தில் லதாவின் அரையாடையை அவிழ்த்து அடிவயிற்றை வருடியதும், எதற்காக? தறிகெட்டு அலையும் இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் செக்ஸ் தீனி போட்டு தன் படத்திற்கு மூன்றாந்தர கூட்டத்தையும் சேர்க்கத் தானே!

அதே மாதிரி தன் படங்களில் குடிக்கும் காட்சிகளில் நடிக்க மறுத்தார். 'ஒளி விளக்கு' படத்தில், தெரியாமல் குடிக்க நேர்வதாக ஓரிடம் வந்த போது கூட அவரது மனசாட்சி 'தைரியமாகச் சொல்! நீ மனிதன் தானா? இல்லை— நீ தான் ஒரு மிருகம். இந்த மதுவில் விழும் நேரம்..." என்று கண்டிப்பதாக பாடினார்.

30 ஆண்டுகளாக சினிமாவில் குடியை எதிர்த்து நடித்தவர் கையிலே ஆட்சி வந்த போது, தெருவுக்குத் தெரு சாராயக் கடைகளை டீக்கடைகள் மாதிரி திறந்திருப்பது யாரை திருப்திப் படுத்த?

பாமரக் கூட்டத்திலுள்ள தரப்பு மக்களுக்குப்— நாத்திகர்கள், ஆத்திகர்கள், ஒழுக்கமானவர்கள், ஒழுக்க மற்றவர்கள், குடியை வெறுப்பவர்கள்; குடிகாரர்கள்— போன்ற எல்லா வகைப்பட்ட ஜனத்திரளுக்கும் அவ்வப்போது சந்தோஷ மூட்டி, தன் செல்வாக்கை உயர்த்தி வருவதையே

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

அவரது பட உலக பாத்திரப் படைப்புகளும், படத்திற்கு வெளியே ஏற்ற பாத்திரங்களும் செய்து வந்தன.

எம். ஜி ஆர் படங்களில் வில்லன்களாகத் தோன்றும் வீரப்பா, நம்பியார் போன்றோர் நிஜ வாழ்வில் மிகவும் ஒழுக்க சீலர்களாகவும், பண்பாளர்களாகவும் விளங்கியும், பாமரர்கள் பலர் நேரிலும் அவர்களை வில்லன்களாக நினைப்பது போல—

எம். ஜி. ஆரை படங்களில் அவர் தாயாராகத் தோன்றும் பண்டரி பாய், எஸ். வரலட்சுமி போன்றோர், உண்மையில் அவரை விட சுமார் 20-வயது குறைவானவர்களாக இருந்தும், பட ரசிகர்கள் அவர்களை மிகவும் வயதானவர்கள் என்று எண்ணுவது போல—

சினிமாவிலும், வாழ்க்கையிலும் நல்லவனாக நடிக்கும் எம். ஜி. ஆரை லட்சக்கணக்கானோர் மிக நல்லவனாக ஏற்று துதித்தனர்.

இதனால் ஏற்பட்ட மாபெரும் செல்வாக்கால், எம்.ஜி.ஆர் திரையுலகில் சர்வதிகாரம் செலுத்தியதைக் கண்டு, திரையுலகமே நடு நடுங்கிய போது, நடிகவேள் எம். ஆர். ராதா மட்டும் எம். ஜி. ஆருடன் துணிவோடு மோத முற்பட்டார். அவரது சர்வதிகார மிரட்டல்களைத் தட்டிக் கேட்க 1967 ஜனவரி-12 ஆம் தேதி நேரே எம். ஜி. ஆரின் ராமாவரம் தோட்டத்துக்கே போனார். வார்த்தைகள் தடித்து நேரடி துப்பாக்கி சண்டை ஏற்பட்ட போது, எம்.ஜி. ஆரின் குறி தவறியது. ராதாவின் குறி தப்பவில்லை. இந்நிகழ்ச்சி பற்றிய வழக்கு மன்ற தீர்ப்பு எம். ஜி. ஆருக்கு சாதகமாகவும் ராதாவுக்கு 7 ஆண்டு சிறைவாசமாகவும் முடிந்தது.

ராதா சிறையிலிருந்து வர நாட்கள் நெருங்கின. ராதா சிறையிலிருந்து வெளி வந்தால், தனது முகத்திரையைக் கிழித்து தன் செல்வாக்கை பாதிக்கக் கூடும் என்ற அச்சத்தால் ராதாவின் சிறை தண்டனையை எப்படியாவது நீடிக்குமாறு எம். ஜி. ஆர் அப்போதைய முதல்வராக இருந்த கருணாநிதியை வேண்டினார், இது பற்றி கருணாநிதியே முரசொலி '-உடன் பிறப்பே'' கடிதத்தில் எழுதுகிறார்:

''ஏழாண்டு காலம் தண்டனை முடிந்து எம். ஆர். ராதா, விடுதலையாகப் போகிற நேரத்தில்—எப்படியாவது அவரை மேலும் சில காலம் சிறையிலேயே வைத்திருக்க வேண்டும் என்றும், அதற்கு ஏதாவது சிறைக்குள்ளேயே ஒரு அசிங்கமான குற்றச் சாட்டை அவர் மீது சுமத்த வேண்டுமென்றும்—முதலமைச்சராக இருந்த என்னைப் பார்த்துக் கேட்டவர் இந்த எம். ஜி. ராமச்சந்திரன். ''அது முடியாது முடியவே முடியாது'' என்று மறுத்தவன் நான்'' (முரசொலி: 1.4.77)

—(தொடரும்)

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

- ☐ சுட்டி ஒவ்வொரு மாதமும் **முதல் தேதி** வெளி வரும்.
- ☐ 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ. 5-00.
- ☐ தனிப்பிரதி 50 காசு.
- ☐ எல்லாத் தொடர்புகளுக்கும்:—

ஆசிரியர் குழு, '**சுட்டி**'
1494, அண்ணா நகர், சென்னை-600 040.

**சுட்டி முன் இதழ்கள் வேண்டுமா?**

இதழ் எண்கள் 1 முதல் 7 10 19,21,22 தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 35 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M O.) அனுப்பினால், எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டியை இலவசமாக அறிமுகப்படுத்துங்கள்**

'சுட்டி'யை இன்னும் படிக்காத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவர்களுக்கு சுட்டியை அறிமுகப்படுத்த விரும்புகிறீர்களா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர்கள் முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரி இதழ் உங்கள் சார்பாக அனுப்புகிறோம். அஞ்சலட்டையின் மேல் மாதிரி இதழ் எனக் குறிப்பிடவும்.

ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரி வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.



## ரங்கா டைப் பௌண்ட்ரி

- ☐ போஸ்டர் அச்செழுத்துக்கள்.
- ☐ எல்லா வித, எல்லா மொழி ஈய எழுத்துக்கள்.
- ☐ அச்சக உபகரணங்கள்.
- ☐ புது அச்சகம் தொடங்க நாணயமான வழிகாட்டுபவர்கள்.

**அலுவலகம்:** 73, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112.
**தொழிலகம்:** 38, குட்டி செட்டி தெரு, பெருமாள்பேட்டை, சென்னை-7.
**தொலை பேசி:** 37999, 664293 ☎

வீட்டுடன் மனை விற்கப்படும்: ராஜேந்திரன், 32-C, மாந்தோப்பு, எலிம் நகர், பெருங்குடி, சென்னை-600096.


FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011




FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

# எந்த ஐயத்திற்கும் பதில்

✳ சட்டம் ✳ மருத்துவம்
✳ மனோதத்துவம் ✳ அரசியல்
✳ பொருளாதாரம் ✳ சமூகவியல்

போன்ற எந்தத் துறையில் எழும் உங்கள் சந்தேகங்களுக்கும் சரியான, தெளிவான பதில் தெரியாமல் இனி குழம்ப வேண்டாம்!

☀ கேள்விகளை "எந்த ஐயத்திற்கும் பதில்" என்று உறைமேல் எழுதி அனுப்பி வையுங்கள்.

☀ பதில்கள் அந்தந்தத்துறை சார்ந்த நிபுணர்களிடமிருந்து பெற்று உங்களுக்கு அஞ்சலில் விளக்கமாக எழுதி அனுப்பப் படும்.


☀ பதில் பெற கட்டணம் கேள்வி ஒன்றுக்கு ரூ. 2-00 பணவிடையாக அல்லது அஞ்சல் தலையாக "சுட்டி" முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

"சுட்டி"
1494, அண்ணா நகர்,
சென்னை-600 040.

FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011

கட்டுரை மாத இதழ் 1, ஜூ. 1983 · Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-56

http://www.thamizham.net
FREE E BOOKS (TAMIL)




# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
13-A, Race Course Road.
Coimbatore-641 018.

Reg. Office & Factory
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E BOOKS - www.thamizham.net - TM2470 / April 2011